மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அந்த நாடக அரங்குகளுடைய உரிமையாளர்களைப் பொறுத்த விஷயம். அதில் அரசு தலையிடுவது இயலாது.

திரு. என். கிட்டப்பா : நாடக அரங்குகளை அரசாங்கமே ஏற்று நடத்த தற்போது இயலவில்லை என்றாலும் திரைப்பட அரங்குகளையாவது அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசமும் இப்போது இல்லை.

திரு. கோவை செழியன் : அரசு உதவியோடு நடத்தப்பட்டு வருகிற மியூஸிக் அகாடமி அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை அப்படிக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்குமேயானால் அதை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether there is any proposal to give long-term loans with low interest to the people who want to construct theatres and drama theatres ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த உத்தேசமும் இப்போது அரசாங்கத்திற்கு எதுவும் இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*328. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) துறையூர் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ரூபாய் 39.00 லட்சம் நிறுவுதல் மதிப்பீட்டுச் செலவிலும் பேணுதலுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 60,000 என்று மதிப்பீட்டுச் செலவிலும் துறையூர் குடிநீர் வழங்கும் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்குப் பொதுப் பணித்துறையின் 5—2—1972 ஆம் நாளிட்ட 221-ஆம் எண் அரசு ஆணையில் அரசு ஏற்பளித்தது. இத்திட்டத்தின் தூநீர் ஈர்ப்புப் பெருங் குழாய் அமைப்பதற்காக தொழில் நுட்ப அடிப்படையில் ரூபாய் 29.79 லட்சத்திற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப் பெருங் குழாய் அமைக்

கும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்க இடப்பணிகள், நீர்ப் பகிர்வு ஏற்பாடு ஆகியவை குறித்த மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வழங்கு, கழிவு நீர் அகற்று வாரியத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்த இடத்திலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புளியஞ்சோலைக்கு அருகில் உள்ள கொல்லிமலையில் தோன்றும் ஐயாறு என்னும் ஆற்றிலிருந்து தண்ணீர் பெறப்படும்.

* 329. Q.—Thiru SOWDI S. SUNDARA BHARATHY : Will the Hon. the Chief Minister be pleased to state the date on which the drinking water supply scheme for Aruppukkottai will be completed ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டத்தின் கீழ் எல்லா வேலைகளும் முடிவடைந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு இறுதியிலிருந்து முறையான குடிநீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : இந்தத் திட்டத்தில் எல்லா வார்ட்களுக்கும் முதலிலேயே தண்ணீர் சப்ளை செய்வதாகயிருக்கிறதா ? அல்லது ஃபையர் சர்வீஸ் ஸ்கீம் போல் குறிப்பிட்ட இடங்களில் சப்ளை செய்யக்கூடிய அளவில் முதலில் நிறைவேற்றுவதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வார்ட்களைப் பற்றிய விவரம் இல்லை. ஆனால் ஒரு நாளைக்கு 13 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக 1996-ல் எதிர்பார்க்கப்படும் அருப்புக்கோட்டை நகர மக்கள் 80,000 என்று கணக்கிடப்பட்டு வழியிலுள்ள சிற்றூர் மக்கள் 20,000 என்று கணக்கிடப்பட்டு, இதனால் அவர்கள் பயனடைவார்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அருப்புக் கோட்டை நகரம் தவிர வழியில் பயன் பெறும் சிற்றூர்கள்:

புல்வைக்கரை.

மடக்கான்குளம்,

சிறுகுளம்,

கரிதான்குளம், செட்டிகுளம்,

காட்டான்குடி,

கோவல்குளம், கொளத்துப்பட்டி,

பாளையம்பட்டி

ஆகிய இடங்களுக்கும் இந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படும்.